


மாண்புமிகு துணை முதலமைச்சரும்,கழக இளைஞர் அணிச் செயலாளருமான **உதயநிதி ஸ்டாலின்** அவர்கள் திருவண்ணாமலை மற்றும் திருச்சி மாவட்டங்களுக்கு இரண்டு நாள் சுற்றுப்பயணமாக சென்றுள்ளார். திருவண்ணாமலை மாவட்டத்தில் அவர் கலந்துகொண்ட நிகழ்ச்சிகளின் புகைப்படத் தொகுப்பு.




● திருவண்ணாமலை மாவட்டத்திற்கு அரசு மற்றும் கழக நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள சென்றுள்ள இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு மக்கள் உற்சாக வரவேற்பளித்தனர்.



● திருவண்ணாமலை மாவட்டத்தில் புதிய வழித்தடத்தில் இயங்கும் அரசு நகரப் பேருந்துகளை தொடங்கி வைத்தார்.



● திருவண்ணாமலை மாவட்டம், ஆண்டாப்பட்டு ஊராட்சியில் செயல்பட்டு வரும் மகளிர் சுய உதவிக் குழுவினரிடம் கலந்துரையாடினார்.



● வடக்கு மண்டலத்துக்குட்பட்ட 41 தொகுதிகளில் பணியாற்றும் 13 ஆயிரம் பாக முகவர்கள் மற்றும் நிர்வாகிகளுக்கான பயிற்சி முகாமில் சிறப்புரையாற்றினார்.



● கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்டக் கழகம் சார்பில் கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்ட இளைஞர் அணி நிர்வாகிகளுக்கு இருசக்கர வாகனங்களை வழங்கினார்.




● திருவண்ணாமலை மாநகராட்சியின் முதல் மேயர் நிர்மலா வேல்மாறன் அவர்களுக்கு மேயருக்கான செங்கோல், அங்கி மற்றும் தங்கச்சங்கிலியை வழங்கி, தூய்மைப்பணிக்கான வாகனங்களின் பயன்பாட்டை கொடியசைத்துத் தொடங்கி வைத்தார்.



● செங்கத்தில் அமைக்கப்பட்டுள்ள முத்தமிழறிஞர் கலைஞரின் சிலையைத் திறந்து வைத்து சிறப்புரையாற்றினார்..





● கலைஞர் நூற்றாண்டு பன்னோக்கு அரங்கைத் திறந்து வைத்து,ரூ.98.83 இலட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.